# HSC 12TH

## STANDARD பொதுத் தமிழ்

## மாதிரி வினாத்தாள் – 1

நேரம் : 2.30 மணி                                                   மதிப்பெண் : 90

### பகுதி – அ

### (செய்யுள், உரைநடை)

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6 x 1 = 6

1. "ஒன்றே யென்னின்….." எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம்

   அ. அயோத்தியா காண்டம்   ஆ. பால காண்டம்

   இ. யுத்த காண்டம்   ஈ. சுந்தர காண்டம்

2. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
   விழுமந் துடைத்தவர் நட்பு – இக்குறட்பாவில் பயின்று வருவன

   அ. அடி மோனை, அடி இயைபு   ஆ. அடி எதுகை, சீர் இயைபு

   இ. அடி மோனை, சீர் இயைபு   ஈ. அடி எதுகை, சீர் எதுகை

3. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

   அ. 4   ஆ. 5

   இ. 6   ஈ. 7

4. 'திவ்வியகவி' என்ற பெயரால் அழைக்கப்பட்டவர்

   அ. குமரகுருபரர்   ஆ. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

   இ. ஒட்டக்கூத்தர்   ஈ. புகழேந்தி

5. "ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப்பொங்கி வழிவதுதான் கவிதை'' எனக் கூறியவர்

   அ. கோலரிட்ஜ்   ஆ. கீட்ஸ்

   இ. ஜான்ரஸ்கின்   ஈ. வோர்ட்ஸ் வொர்த்

6. செப்புத்திருமேனிகளின் பொற்காலம் எனச் சுட்டப்படுவது

   அ. சேரர் காலம்   ஆ. சோழர் காலம்

   இ. பாண்டியர் காலம்   ஈ. நாயக்கர் காலம்

II. (அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.) 3 x 2 = 6

7. “முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
 கடிமகள் கதுப்பின் நாறி” – இவ்வடிகள் உணர்த்தும் செய்தி யாது?

8. வன்மையுள் வன்மை எது?

9. இராமன் குறிப்பால் உணர்ந்தவை யாவை?

10. “புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்” எனப் பாரதிதாசன் குறிப்பிடுவது ஏன்?

(ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 2 = 4

11. பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்குத் தரும் வரையறை யாது ?

12. “நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்” – எப்போது?

13. மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள் யாவை?

III. (அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

14. வரதநஞ்சையப்பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று

கூடலிற் சென்று புகலீர்”- இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

16. பாலைத்திணை (அல்லது) பொருண்மொழிக்காஞ்சித் துறையை விளக்குக.

(ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

17. நாடகத்தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?

18. அறுமுறை வாழ்த்து – தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

19. செல்வம் நிலைபேறு உடையதன்று – என்பதை நாலடியார் எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?

IV. அ) நெடுவினா ( இருபது வரிகளில் விடை தருக.) 2 x 6 = 12

20. “அறிவுடைமை” என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதை நிறுவுக.

(அல்லது)

அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரையில் காணப்படும் நாட்டுப்பற்றினைத் தொகுத்தெழுதுக.

21. இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாகப் பாடப்பகுதியில் வரும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

கவிதை இன்னது என்று பேராசிரியர் வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் விரித்தெழுதுக.

**(ஆ) அடிபிறழாமல் எழுதுக** **4 + 2 = 6**

22. (அ) “வெல்லை….. ” எனத்தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

(ஆ) “....... தொழில்” என முடியும் திருக்குறள்

**பகுதி – ஆ**

**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப் பயிற்சி)**

**V. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.)** **8 x 1 = 8**

23. <u>அகல்முகில்</u> உருக்கொடு – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ. பண்புத் தொகை ஆ. வினைத்தொகை

இ. உவமைத்தொகை ஈ. இலக்கணப்போலி

24. ‘சட்டை’ என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ. புதுமைப்பித்தன் ஆ. ஜெயகாந்தன்

இ. அய்க்கண் ஈ. கந்தர்வன்

25.“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” என்னும் விதி பயின்று வரும் சொல்

அ. தென்கரை ஆ. கற்கொடி

இ. அறனல்ல ஈ. தினந்தினம்

26.“நமஸ்காரம்” – இச்சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லைத் தேர்க.

அ. வழிபாடு ஆ. வாழ்க்கை

இ. வணக்கம் ஈ. வாழ்த்து

27. பொருந்தாத இணையைத் தேர்க.

அ. வேலி – இராஜம்கிருஷ்ணன் ஆ. மகன் – பா. செயப்பிரகாசம்

இ. கிழிசல் – அய்க்கண் ஈ. பழிக்குப்பழி – த. நா. சேனாதிபதி

28. <u>விக்கி விக்கி</u> அழுதவர்கள் – அடிக்கோட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ. இரட்டைக் கிளவி ஆ. அடுக்குத் தொடர்

இ. உரிச்சொற்றொடர் ஈ. வினையெச்சம்

29. பால்வண்ணம் பிள்ளை எனும் சிறுகதையின் மூலம் நாம் அறிந்துகொள்வது

அ. ஒற்றுமையே வலிமை ஆ. சிறுதுளி பெருவெள்ளம்

இ. சிறு குடும்பம் சீரான வாழ்வு ஈ. பேராசை பெரு நட்டம்

30. அலை, அளை இச்சொற்களுக்குரிய பொருளறிந்து தேர்க.

அ. கடலலை, அலைதல் ஆ. புற்று, திரிதல்

இ. அலைதல், புற்று ஈ. கூப்பிடுதல், புற்று

VI . குறுவினா (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக) 7 x 2 = 14

31. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

அ. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது

ஆ. வெண்ணிலா கலக்கலவென்றுச் சிரித்தாள்

32. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ. மக்கள் கிடையாது

ஆ. மதுரை என்ற நகரம்

கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக.

அ. கொடுத்த சேதியை முழுசா பேசு

ஆ. ஒனக்கு புடிச்சத சாப்புடு

34. பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களை எழுதுக.

அ. Smart phoneஆ. Whatsapp இ. குமாஸ்தா ஈ. மாமூல்

35. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ. இளந்தேங்காய், முற்றிய தேங்காய் இரண்டும் தென்னை மரத்திலிருந்து விழுந்தன

ஆ. மயில் கூவ குயில் கத்தியது

36. அரண், அறன் – பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க.

37. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக .

அ. உனக்கில்லை ஆ. பச்சிலை

38. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ. நோக்கி ஆ. மறவற்க

39. பகுபத உறுப்புகள் யாவை?

**VII எவையேனும் மூன்றனுக்கு விடை தருக (மொழித்திறன் பயிற்சிகள்) 3 x 4 = 12**

40. உவமையணி (அல்லது) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

41. தமிழாக்கம் தருக.

அ. Think before you speak

ஆ. Face is the index of the mind

இ. Indian people always dislike violence

ஈ. Work more talk less.

42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை
எடுத்தெழுதுக.

வாணிகர்தம் முகவரியை வரைகின்ற
பலகையிலே ஆங்கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால் வரைக, என
அன்னவர்க்குச் சொல்ல வேண்டும்!
ஆணிவிற்போன் முதலாக அணிவிற்போன்
ஈறாக அனைவர் போக்கும்
நாணமற்ற தல்லாமல் நற்றமிழின்
நலம் காக்கும் செய்கையாமோ?

- பாரதிதாசன்

43. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

பருவத்தே பயிர்செய் (அல்லது) சிறுதுளி பெருவெள்ளம்.

**VIII பின்வரும் துணைப்பாடப்பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1 x 6 = 6

44. “சட்டை” என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

( அல்லது)

“ஓர் உல்லாசப் பயணம்” – இச்சிறுகதையின் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக வரைக.